தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர்
இதழ்



# பள்ளிக்குப் போ!


பள்ளிக் கூடம் திறந்தது!
 பையைத் தூக்கிக் கொள்ளுவாய்!
வெள்ளைச் சட்டை போடுவாய்!
 விரைந்து சென்று கூடுவாய்!

கன்று போல ஆடிப் போ!
 காக்கைப் பாட்டுப் பாடி வா!
ஒன்று இரண்டு கற்று வா!
 உரல் ஊஞ்சல் எழுதி வா!

ஒழுக்கம் அன்பு கற்று வா!
 உடற் பயிற்சி பெற்று வா!
அழுக்கு நெஞ்சைத் தூய்மை செய்;
 அடக்கம், அமைதி வாய்மை வை!

பாட்டும் கதையும் படித்து வா!
 பண்ணைக் கடைப் பிடித்து வா!
நாட்டுப் பற்றை வளர்த்துவா!
 நமது மொழியைக் கற்று வா!

குரல்: 3. இசை: 9.



விலை 20 காசு

# தூங்காயோ பாப்பா!

அழாதே பாப்பா அழாதே!
அம்மா வருவாள் அழாதே!
எழாமல் தூங்காய் கண்மணியே!
இனிக்கும் கன்னம் உண் கனியே!

இமைகள் மூடித் தூங்காயோ?
என்றும் நற்பேர் வாங்காயோ?
அமைதி யாகக் கண்ணயராய்
அழகுத் தமிழின் பெண்ணரசி!

தாலே லாலோ லாலேலோ
தனியாய்க் கறந்த பசும்பாலோ?
சேலோ? விழியோ? குளிர் பூவோ?
சிறுமான் கன்றே! உறங்காயோ?

கனியோ கதுப்போ உன் கன்னம்?
கற்பனைக் கனவோ உன் எண்ணம்?
பனிதோய் தாமரை இதழோ-உன்
பவளச் செவ்வாய்? தேன்கிண்ணம்!

நெற்றித் துண்டோ? பிறைநுதலோ?
நெடுங்கூர் மூக்கோ? கிளியலகோ?
சுற்றிச் சுழலும் விழி,வண்டோ?
சூரிய முகமோ? பூச்செண்டோ?

கத்தரிப் பிஞ்சோ? மணிக்கையோ!
கருணைக் கிழங்கோ? குதிகாலோ?
முத்தமிழ்த் தேனோ? முரல்யாழோ?
மூவேந் தர்தம் குலக்கொடியோ?

சந்தனப் பலகை உன்னுடலோ?
சங்கொளிர் அழகோ மென்கழுத்தோ?
செந்தமிழ் இசையோ உன்மழலை?
சிறுமயில் குஞ்சே! உறங்காயோ?

மாதுளம் பூவோ, கொப்பூழோ?
மழைவான் வில்லோ, ஒளியுடலோ?
தீதிலா நெஞ்சின் பெருநினைவோ?
தென்றற் காற்றே! துயிலாயோ?

துரை-மாணிக்கம்.

# தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்


இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!


குரல்-3 | தி.பி.-௨௦௦௦ (மேழம்) ஏப்பிரல், மே--69 | இசை-9.


# கல்விக்கு மட்டும் இளமை அன்று! பண்புக்கும் இளமைதான்!

தம்பி! 'இளமையில் கல்', 'இளமையில் கல்வி, கல்மேல் எழுத்து'—என்பன பழமொழிகள். கல்வி கற்க இளமையே தகுந்த பருவம் என்பதே அவற்றின் பொருள்! தம்பி! ஐந்தில் வளைவது ஐம்பதில் வளையாது அன்றோ? களங்கமறியாக் குழந்தை மனத்தோடு இருக்கும்பொழுது நாம் கற்றால்தான், அக்கல்வி நம் உள்ளத்தில் மிக ஆழமாகப் பதியும். நாம் வளர வளர உலகத்தின் பலவகையான இன்ப துன்பங்களில் சிக்கித் தவிக்கின்றது நம் உள்ளம்; அப்பொழுது இவ்வுள்ளத்தையும் அறிவு நாட்டத்தையும் ஒருமுகப்படுத்திக் கல்வியில் செலுத்துவதென்பது கடினம். எனவே நம் உள்ளம் உலக இன்ப துன்பங்களைப் பற்றி அறியாத இளமைப் பருவத்திலேயே நாம் கல்வியில் கருத்தூன்றிக் கொள்வதுதான் நல்லது என்று பெரியோர் கருதுகின்றனர். சிறு அகவைப் பொழுதிலிருந்தே கல்வியில் நாட்டங் கொள்ளாமல் இருந்துவிடுவோமானால், அதன் பின்னர் நம் மனத்தை அதில் திருப்புவது என்பது குதிரைக் கொம்புதான்!


வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்,
தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

தம்பி! கல்வியை எப்படி இளமையிலிருந்தே கற்றுக்கொள்ள வேண்டுமோ, அப்படியே பண்பையும் நாம் இளமைப் பருவத்திலிருந்தே கற்றுக்கொள்ளுதல் வேண்டும். கல்வி கற்கக் கற்கப் பண்பு வளரும். பண்பு வளர வளரக் கல்வி மேல் நாட்டம் வளரும். கல்வியில் நாட்டக் குறைவு ஏற்படுமானால் பண்பும் குறையும். பண்பு குறையுமானால் கல்வியைப் புறக்கணிக்கத் தோன்றும். ஆகவே தம்பி, கல்வியும் பண்பும் ஒன்றுக்கொன்று துணையாக நிற்பவை. கல்வி இல்லாதவனைத்திருவள்ளுவர் **'பேதை'** என்றும், கல்வியிருந்தும் பண்பு இல்லாதவனைப்**'பேதையுள் பேதை'** என்றும்கடிந்துரைக்கின்றார். தம்பி, அறிஞர் போற்றுகின்ற நல்ல குணங்களே பண்பு என்று பாராட்டப் பெறுகின்றன. கல்வி கற்றும் அறிஞர் போற்றுகின்ற நல்ல குணங்களைப் பெறாதவனை உலகம் மதிப்பதில்லை. அப்படிப்பட்டவன் பெருஞ் செல்வனாக இருக்கலாம்; உயர்ந்த மாளிகைகளில் குடியிருக்கலாம்! இயங்கிகளில் செல்லலாம்; ஆனால் அவனை அறிஞர்கள் பாராட்ட மாட்டார்கள்.

தம்பி, இத்தகைய உயர்ந்த பண்பையும் ஒருவன் இளமைப் பொழுதிலிருந்தே கற்றுக்கொள்ளுதல் வேண்டும். இளமையிலிருந்தே நல்ல பழக்க வழக்கங்களை மேற்கொள்ளுதல் வேண்டும். அன்பு, அடக்கம், பிறர் துன்பங்கண்டு இரங்குதல், தேவையான விடத்து முடிந்த அளவில் பிறர்க்கு உதவுதல், ஒழுக்கமாக இருத்தல், பொய்கூறாமை, வஞ்சித் தொழுகாமை முதலியவை இளமையிலிருந்தே கற்கத் தக்கன. சிறுவனாயிருக்கையில் திருடுகின்ற பழக்கத்தைக் கடைப்பிடிக்கும் ஒருவன், பெரியவனாக வளர்ந்தாலும் அப்பழக்கத்தை விடாமல் பின்பற்றுகின்றான். சிறுவனாக இருக்கும்பொழுது பிறர்க்குத் தன்னாலான உதவிகளைச் செய்யாத குணம் உடையவன், வளர்ந்து பெரியவனாக ஆகும் பொழுதும் எவருக்கும் உதவாத வன்னெஞ்சனாகவும் தன்னலம் உடையவனாகவுமே இருப்பான். சிறுபொழுதில் பொய் சொல்லக் கற்றவன், அப்பழக்கத்தைப் பிற்காலத்தில் என்றும் மறப்பதில்லை. 'தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்ற பழமொழியைக் கேட்டிருக்கின்றாய் அன்றோ? தூய்மையாக இருக்கப் பழகுதலும், நேர்மையாக வாழ விரும்புதலும், உதவி செய்யும் மனப்பாங்கைப் பெறுவதும் இளமையிலிருந்தே வளர்கின்ற பண்புகளாகும். ஒருவன் பிற்காலத்தில் பண்புள்ளவனாக ஆவதும், பண்பற்றவனாக இருப்பதும் அவன் இளமைக்கால வளர்ச்சியைப் பொறுத்தே அமைகின்றன.

எனவே, இளமைக்காலம் என்பது கல்வியைக் கற்றுக்கொள்ளும் காலம்மட்டும் இல்லை; ஒழுக்கத்தையும் பண்பையும் கற்றுக்கொள்ள வேண்டியகாலமுமாகும். விதையில்உள்ள வேம்பின் கசப்புத்தான் இலையிலும் கசக்கின்றது; பட்டையிலும் கசக்கின்றது; காயிலும் கசக்கின்றது; கனியிலும் கசக்கின்றது, கொட்டையைப் பிழிந்து வந்த நெய்யிலும் கசக்கின்றது. ஆகவே இளமைக் கசப்பு என்றும் போகாது.

வேங்கடேசன்.



# பெரியோர் கதை!

## ஓவியர் இரவிவர்மன்

சே. இ. செய்கு சுலைமான்.

அழகு தவழும் பழந்தமிழ் நாட்டின் ஒரு பகுதி, மலையாளம். இயற்கை வளம் நிறைந்த நாடு அது. அந்த நாட்டிலே கிளிமானூர் என்னும் ஊரில் பிறந்தவரே இரவிவர்மன். அவர் பிறந்த ஆண்டு 1848; திங்கள், ஏப்ரல்; நாள், 29. அவருடைய அருமை அன்னையின் பெயர் அம்பா பாய். தந்தையார் பெயர் பட்டதிரி. இவர்கள் இருவருக்கும் முதல் பிள்ளையாகப் பிறந்தார் இரவி. அவருடன் பிறந்தவர் மூவர். அவர்களில் இராசராசவர்மா என்பவர் இரவியின் கடைசிக் காலம் வரையில் இருந்தார். அவரும் ஓர் உயர்ந்த ஓவியரே!

''விளையும் பயிர் முளையிலே தெரியும்'' என்பது, பைந்தமிழ் நாட்டுப்பழமொழிகளில் ஒன்று. இது நூற்றுக்குநூறு உண்மை என்பதை உணர்த்தும் வகையில் இரவிவர்மாவின் பள்ளிப்பருவத்தில் ஒரு நிகழ்ச்சி நடந்துள்ளது.

இரவி பள்ளியில் படித்துக்கொண்டிருந்த காலம். ஒருநாள் ஓவிய வகுப்பு நடந்து கொண்டிருந்தது. ஓவிய ஆசிரியர் ஒருவர், ஐந்து புள்ளிகளைக் கரும்பலகையில் வைத்துவிட்டு, ''யாரேனும் இந்த ஐந்து புள்ளிகளைக்கொண்டு, ஒரு மாந்தனின் படம் எழுத இயலுமா?'' என்று வினவினார். ஒருவரும் பேசவில்லை. சிறுவர் அனைவரும் அமைதியாய் இருந்தனர். அப்போது, இரவி எழுந்து, ''ஐயா! என்னால் எழுத இயலும்'' என்று கூறியவாறே கரும்பலகையை நோக்கி நடந்தார். சற்றுநேரம் கழிந்தது. ஐந்துகோடுகளைத் தொட்டவாறே கரும்பலகையில் ஓர் அழகிய மாந்தனின் படம் இருந்தது. அதைக் கண்ணுற்ற ஆசிரியர் அளவற்ற வியப்பில் ஆழ்ந்தார். சிறுவர் இரவியின் திறனைக் கண்டார். மகிழ்வு கொண்டார்; மனமாரப் பாராட்டினார். இவ்வாறு, ''விளையும் பயிர் முளையிலே!'' என்பதை மெய்ப்பித்துக் காட்டினார், இரவி.

சிறுவராக இருந்தபோதே இரவி, தாம் கற்பனையில் கண்டன வெல்லாம் கரிக்கட்டையால் சுவர்களிலே எழுதிவைப்பார். இந்த இளங்கலைஞரின் செயல் உற்றுர் உறவினர்களுக்குத் தொல்லையாக இருந்தது. இரவியின் தாய்மாமன் இராசராசவர்மா ஓர் ஓவியர்; கண்டிப்பானவர். சுவரில் எழுதுவதைக் கண்டால் அவர் சினம் கொள்வார் என்றெண்ணி இரவிவர்மனைக் கண்டிப்பர், அவரின்உறவினர்கள். அதைப்பற்றி அணுவளவும் கவலையுருமல் எழுதித்தீர்ப்பார் இரவி. பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவான் அன்றே? ஒருநாள் சிறுவர் சுவரில் கிறுக்கிவைத்திருந்த படங்களைப் பார்த்துவிட்டார், தாய்மாமன். சினம் கொள்ளவில்லை அவர்; மாருக மகிழ்ந்தார். இரவியின் ஓவியங்களைக்கண்டு, உவகைகொண்டு, வியந்தார். "பாம்பறியும் பாம்பின் கால்" என்பதற்கேற்ப இரவியின் திறமையை உணர்ந்தார். ஆகவே. அவர்வண்ணங்களையும்தூரிகையையும் வாங்கித்தந்து, "அழகாக எழுது" என்று ஆர்வம் அளித்தார். துள்ளி ஓடும் புள்ளி மான்; மனத்தை மயக்கும் மயிலின் உருவம் முதலிய எழில் நிறைந்த இயற்கைக் காட்சிகளை எழுதினர், இரவி.

இப்படியாகச் சிறுவர் ஓவியம் எழுத முயற்சி எடுத்துப் பயிற்சி பெற்றுர். தாய்மாமன் அவற்றிற்கெல்லாம் ஆக்கமும் ஊக்கமும் அளித்துவந்தார். அதுவே, பிற்காலத்தில் இரவிவர்மன் உலகம் புகழும் ஓவியராகத் திகழ்வதற்கு ஏதுவாயிற்று.

எவ்வளவுதான் தாமே பயிற்சி பெற்றுலும், ஆசிரியரிடத்துப் பயிற்சி பெற்றுல்தான் சிறப்பு என்பதை உணர்ந்த இரவியின் தாய்மாமன், அப்போது திருவனந்தபுரத்து மன்னரிடம் அரசவைக் கலைஞராக இருந்த இராமசாமி என்பவரிடம் மாணவராக இரவியை அமர்த்தினர். இரவிக்கு வியக்கத்தக்க திறமை இருப்பதை உணர்ந்த அரசவை ஓவியர் இராமசாமி அச்சமடைந்தார். அனைத்தும் கற்றுத் தந்தால் யாவரையும் மிஞ்சும் ஓவியனுக வந்துவிடுவான் மாணுக்கன் என்றெண்ணி, தாம் கற்றுத்தருவதை நிறுத்திக்கொண்டார் அவர்.

பிறகு, இரவி தாமாகவே அல்லும் பகலும் அரும்பாடுபட்டுத் தம் ஓவியத்திறனை வளர்த்துக் கொண்டார். 1866-ஆம் ஆண்டு, அரசர் மனைவியின் இளைய தங்கைக்கும் இரவிக்கும் திருமணம் நடைபெற்றது. அதனுல், அவர் பல உயர்ந்த நிலையில் உள்ளவர்களிடம் பழக வாய்ப்பேற்பட்டது. அவர் தீட்டிய ஓவியங்கள் பெரிய இடங்களிலே காட்டப்பட்டன. அதைக்கண்ட பெரியோர் பலரும் அவருக்கு அன்பராயினர்; நண்பராயினர்.

1873-ஆம் ஆண்டு சென்னையில் ஓர் ஓவியக் கண்காட்சி நடந்தது. இரவிவர்மன் மலையாள மங்கை ஒருத்தியின் படத்தை அழகாக எழுதி அனுப்பினர். அது பொற்பதக்கம் பரிசு பெற்றது. அதனால், அவர் புகழ் பரவியது. சென்னை ஆளுநர் (Governer) பாராட்டும் அளவுக்குப் புகழ் பெற்றவரானர். சென்னையில் பரிசுபெற்ற அவ்வோவியம் அரசினர் சார்பாக அனைத்து நாடுகளின் ஓவியக்கண்காட்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அங்கும் அந்த அழகிய ஓவியம் பொற்பதக்கத்தையும், நற்சான்றிதழையும் பெற்றது. அதற்குஅடுத்த ஆண்டும் சென்னையில் நடந்த கண்காட்சியில், "யாழ் இசைக்கும் தமிழிசை மங்கை" எனும் ஓவியத்தை அனுப்பி வைத்தார். சென்ற ஆண்டினும் இவ்வாண்டு அதற்கு நிரம்பப் பாராட்டும் புகழுரைகளும் கிட்டின. இப்படியாக இரவிவர்மாவின் புகழ் எங்கும் பரவத் தொடங்கிற்று.

இரவியின் இன்பமான இல்லற வாழ்வின் பயனய், 1880-இல் இராமராம வர்மா என்ற ஓர் ஆண் குழந்தை பிறந்தது. ஆனல் சில காலத்திற்குப்பின்பு அவருடைய அன்பான அன்னை மண்ணுலகை விட்டு விண்ணுலகை அடைந்தார். அன்பே உருவான அன்னையின் இழப்பினல் அளவற்ற துயருக்கு ஆளானர் இரவி.

இப்போது, இரவியின் புகழ் இந்தியாவெங்கணும் பரவத் தொடங்கிற்று. வடநாட்டில் வாழ்ந்துவந்த பரோடா மன்னரின் விருப்பத்திற்கிணங்க அங்குச் சென்று அழகிய ஓவியங்கள் தீட்டித் தந்தார். ஊர் திரும்பிய சில நாட்களுக்குள் அவரின் காதுகளுக்கு ஈயத்தைக்காய்ச்சி ஊற்றுவது போன்ற செய்தி ஒன்று கிடைத்தது. அவருடைய அருமைத் தாய்மாமன் இறப்பே அவருக்குக் கிடைத்த அந்தச் செய்தியாகும். அதன்பிறகு, அவரின்மேல் அன்பைச் சொரிந்த மனைவியும் 1831-ஆம் ஆண்டு காலமானர்கள். ஆற்ருெணுத்துயருக்கு ஆளானர் அவர்.

அமெரிக்காவில் சிகாகோ என்னும் பேரூரில் 1892-ஆம் ஆண்டு நடந்த கண்காட்சி, ஓவியர் இரவிவர்மாவை உலகப் புகழுக்கு உள்ளாக்கியது. அந்தக் கலைக்கண்காட்சிக்குப்பத்து ஓவியங்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பினர் இரவி. அவரின் ஓவியங்களில் இரண்டிற்கு பொற்பதக்கங்களும்,, பல நற்சான்றிதழ்களும் கிடைத்தன. அமெரிக்காவின் நாளேடுகள் இந் நிகழ்ச்சியை மகிழ்ச்சியுடன் பாராட்டி எழுதின.

1894-ஆம் ஆண்டு அச்சகம் ஒன்றை அவர் வாங்கினார். அரச குடும்பத்தின் இளவரசரை வளர்க்கும் பொறுப்பாலும், வேறு பல அலுவல்கள் இருந்ததாலும், எதிர்பார்த்த ஊதியம் அச்சகத்தின் மூலம் கிடைக்காததாலும், அதை விற்றுவிட்டார். அதை ஒரு செருமனியர் வாங்கிக்கொண்டார். அந்த அச்சகத்தை விற்குப்போது விலை மதிக்க இயலாத மூல ஓவியங்கள் பலவும் போய்விட்டன.

இரவியின் உடன்பிறந்த இராசராசவர்மா வயிற்று வலியின் பொருட்டுச் சென்னை சென்று, மருத்துவ மனையில் சேர்ந்தார். அங்கு அவருக்கு அறுவை மருத்துவம் நடைபெற்றது. ஆயினும் அஃது அவருடைய நோயை நீக்காது உயிரைப் போக்கிவிட்டது. உடன் பிறந்தார் இறந்த செய்தி கேட்ட இரவி, அளவற்ற அதிர்ச்சிக்கு ஆளானார்; கண்களில் நீர் பெருகியது. சிறிது காலத்திற்குப் பின்பு, இரவி தம் அன்பு மகனுடன் மைசூர் மன்னரிடம் சென்று பல உயர்ந்த ஓவியங்களை உருவாக்கினார்.

"காதம்பரி என்னும் காரிகையின் ஓவியத்தை உருவாக்க எண்ணினார் இரவி. 1906-ஆம் ஆண்டு சூன் திங்களுக்குப் பிறகு அப் பாவையின் படத்தைத் தீட்டத் தொடங்கினார். படம் எழுதுவதற்கு முன்னமே அவருக்கு நீரழிவு நோய் இருந்தது. அதைப்பற்றி அணுவளவும் கவலைப்படாமல் அல்லும் பகலும் எழுதுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார். அதனால் நோய் முற்றியது. உற்றார் உறவினர் தடுத்தனர், ஓய்வு வேண்டும் என்று. ஆயினும், நோய் அவரைத் தாக்கி இறக்கும் நிலைக்கு ஆளாக்கிவிட்டது. இரவிக்கு, அழகிய அந்த ஓவியத்தை முடிக்கவில்லையே என்ற ஏக்கம். அந்த ஏக்கத்திலேயே மீளாத் தூக்கத்தில் ஆழ்ந்துவிட்டார் அவர். ஆம்; உலகமே புகழ்ந்த அருமையான ஓவிய மேதை மறைந்தார். அவர் ஓவியங்களால் தென்னாட்டின் பெருமை உலகமே வியக்கும்படி உயர்ந்தது

## மாணவர்களுக்கு ஒரு நல்வாய்ப்பு!

கல்வியாண்டுத் தொடக்கத்தை முன்னிட்டு நந்தம் செந்தமிழ் மாணவர்களுக்குத் தனிப்பட்ட சலுகை தரப்படுகின்றது.

தமிழ்ச்சிட்டு இதழுக்கு ஐந்து உறுப்பினர்களைச் சேர்த்து, அவர்களின் கட்டணத்தையும் முகவரிகளையும் அனுப்பிவைக்கும் மாணவர்க்கு ஓராண்டுக்கு இலவசமாகத் தமிழ்ச்சிட்டு விடுக்கப் படும். மூன்று திங்கள்மட்டுமே இச்சலுகை யுண்டு. இவ்வாய்ப்பைப் பயன்படுத்த மாணவர்கள் முந்துக.

அமைச்சர்,
"தமிழ்ச்சிட்டு"

# கழுதை அழுத கதை.

துரை-மாணிக்கம்

வந்த பெருங்கூட்டம்
வாழ்த்தொலிகள் சேர்ந்தொலிக்க
அந்தப் புதைகாட்டை
அண்மி, அது கொண்டுவந்த
பாடை இறக்கிவைத்துப்
பட்டபிணம் தூக்கியொரு
மேடைவைத்து மாலைபல
மேல்போர்த்திப் பின்வருமா(று)
ஓரிருவர் பேச
உருக்கமொடு கேட்டதுவே!

"சீர்மிகுந்த தோழரீர்!
இன்று பலர்புகழும்
பேர்மிகுந்த நம்தலைவர்
நம்மைப் பிரிந்துவிட்டார்;
ஊர்மிகுந்த துன்பநிலை
உற்ற(து) இனி என்செய்வோம்?
இன்ன தலைவரைப்போல்
எப்படி நாம் பெற்றிடுவோம்?
மன்னருக்குள் மன்னர்;
மதிப்புயர்ந்த மாந்தரிவர்!

அன்ன தலைவர்
அரும்பேர் விளங்கிட நாம்
பொன்னால் படிவமொன்று
செய்தாலும் போதாதே!
ஆனாலும் வெண்கலத்தால்
அன்னார் படிவமொன்று
மேனாள் அமைக்க
மிகுபொருளைச் சேர்த்துள்ளோம்"
—என்றொருவர் பேச
இருந்தவரும் நன்றென்றார்.

பின்புபலர் மாய்ந்த
பெருந்தலைவர் மாண்புரைத்தார்.
அன்பர் இரங்கலுரை
ஆற்றி முடிந்தவுடன்
இன்பத் தலைவருடல்
எல்லாச் சிறப்புடனும்
நல்லடக்கம் செய்யப்
படவும், நடந்தார்கள்!

புல்லடர்ந்த மொய்ம்புதர்க்குள்
போயொளிந்த தாய்க்கழுதை
குட்டியொடும் காளையொடும்
வந்து குறுகுறுப்பாய்
எட்டிநடை போட்டே
இடுகாட்டைத் தாண்டியது!
தாண்டியதும் காளை
தனைநோக்கி, "அண்ணாவே
மாண்ட தலைவர்தம்
மாண்புகளைக் கேட்டீரோ?
மன்னருக்குள் மன்னராம்!
மாண்புயர்ந்த மாந்தராம்!
என்னே! வெறும்புகழ்ச்சி!
எத்தகைய பொய்யுரைகள்!

அன்னவரை நானறிவேன்;
ஆரும் அறிவார்கள்.
சின்னவருள் சின்னவராம்!
சீர்கெட்ட மாந்தரவர்!
நான்வாழும் வீட்டிற்கு
நால்வீடு தள்ளினால்
தான்வாழும் வீடாம்!
தரங்குறைந்த வாழ்க்கையது!

அன்னவரின் வீட்டில்
அயல்நாட்டு நாயொன்று;
சின்ன உரு வென்றாலும்
உள்ளம் சிறந்ததுவாம்!
என்றனக்கு நண்பன்;
இவர்கதைகள் அத்தனையும்
ஒன்றுவிடா தென்பால்
உரைத்துளதால் யானறிவேன்.

(தொடரும்)

## நாடுகள் காண்போம்.

# இந்தியா.

"தனிமுதல்வன்"

*1.* இந்தியாவின் மொத்த நிலப்பரப்பு 80.63 கோடி குறுக்கம். (ஏக்கர்)

*2.* இதன் மொத்த நிலப்பரப்பில் 35% செழிப்பானது; 25% பயிரிடப்படவில்லை; 15% காடுகள்; மற்றவை பாலைநிலம், மலைகள், பாறைகள் ஆகும்.

*3.* காடுகளின் மொத்தப் பரப்பு 22.54 கோடி குறுக்கம். இதில் ஆறில் ஒருபங்கு மாந்தன் பயன்படுத்த முடியா உயரத்தில் அமைந்துள்ளது.

*4:* இங்குள்ள காடுகளில் 2500 மர வகைகள் காணப்படுகின்றன.

5. இதன் மொத்த விளைநிலம் 36 கோடி குறுக்கந்தான்.

6. நெல்விளையும் இடம் மொத்த விளை நிலத்தில் 30 விழுக்காடு ஆகும். அஃதாவது 7,69,00,000 குறுக்கம் நிலத்தில் 2,68,46,000 கல்லெடை (டன்) நெல் விளைகிறது.

7 உலக அரங்கில் நெல் விளைவில் இந்தியா இரண்டாம் இடத்தைப் பெறுகின்றது.

8. இந் நாட்டில் குறுக்கம் ஒன்றிற்கு 862 கால் வீசங் கல்லெடை (பவுண்டு) நெல்தான் விளைகிறது. ஆனால் அதே அளவு நிலத்தில் அமெரிக்காவில் 1485 கால் வீசங் கல்லெடை நெல்லும், சப்பானில் 2550 கால் வீசக் கல்லெடை நெல்லும் விளைகின்றது.

9. இங்கு 3,03,86,000 குறுக்கம் நிலப்பரப்பில் 90,68,000 கல்லெடை கோதுமை விளைகிறது.

*10.* மொத்தம் 27 44,000 கல்லெடை பார்லி விளைகிறது.

*11.* இங்கு *109* சணல் தொழிற்சாலைகள் உள்ளன. உலக விளைவில் *40* விழுக்காடு நம் நாட்டில் விளைவிக்கப்படுகிறது. *133* கோடி உருபா மதிப்புள்ள சணல் பொருள்கள் ஆண்டுதோறும் ஏற்றுமதியாகின்றன

12. பத்து இலக்கம் குறுக்கம் நிலப்பரப்பில் 3 இலக்கம் கல்லெடை (Ton) புகையிலை விளைகிறது.

13 உலகின் மொத்தப் புகையிலை விளைவில் 35 விழுக்காட்டை முழுமையாக்கும் இந்தியா, உலக நோக்கில் புகையிலை விளைவில் இரண்டாம் இடத்தைப் பெறுகிறது.

14. இங்கிருந்து ஆண்டுதோறும் 4,00,000 கல்லெடை சருக்கரை அயல்நாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது.

15. இங்கு ஆண்டொன்றுக்கு 16,000 கல்லெடை இழுவை [ரப்பர்] எடுக்கப்படுகிறது. இத் தொழிலில் 33,000 மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

16 இந்தியாவில் ஆண்டுக்கு 18,000 கல்லெடை குளம்பிக் கொட்டை விளைகின்றது. குளம்பிச்செடி [காபிசெடி] பயிரிடப்படும் நிலத்தின் பரப்பு 2,24,000 குறுக்கம். மொத்தம் 10,850 குளம்பிச் செடி தோட்டங்கள் நம் நாட்டில் உள்ளன

17. 2 இலக்கம் குறுக்கம் நிலப்பரப்பின் மூலம், 80.000 கல்லெடை முந்திரிப் பருப்பு ஆண்டுதோறும் கிடைக்கிறது.

18. உலக விளைவில் 96 விழுக்காடு முந்திரிப்பருப்பை விளைவிக்கும் இந்தியாதான், அவ்விளைவில் உலகிலேயே முதலிடம் பெறுகிறது.

10. இங்கு ஆண்டுதோறும் 10 இலக்கம் கல்லெடை மீன் பிடிக்கப்படுகிறது. இதில் 1/5 பங்குதான் உணவுப் பொருளாகப் பயன்படுகிறது.

20. இந்தியாவில் ஒவ்வோர் ஆண்டும் 20 இலக்கம் கல்லெடை உப்பு எடுக்கப்படுகிறது.

21. இங்கு இப்பொழுது 500 பருத்தி ஆலைகள் உள்ளன. அவற்றில் 10,00,000 மக்கள் பணி புரிகின்றனர்.

22. இந்தியாவில் இப்பொழுது 107 பெரிய தீப்பெட்டித் தொழிற்சாலைகளும், 243 சிறு தொழிற்சாலைகளும் உள்ளன.

23. அத் தொழிற்சாலைகளில் 16,000 மக்கள் வேலை செய்கின்றனர்.

24. 1948-இல் முதல் உள்நாட்டுக் கப்பல் மிதக்க விடப்பட்டது கடந்த 20 ஆண்டுகளில் இந்தியாவில் 34 கப்பல்கள் கட்டப்பட்டுள்ளன

25. இந்தியா தன் அயல்நாட்டு வணிகத்தில் 43 கப்பல்களை ஈடுபடுத்தியுள்ளது.

26. இந் நாட்டில் தற்பொழுது 3, 80,800 பதினூற்றுச் சீரடி (கி. மீ.) நீளமுள்ள சாலைகள் உள்ளன.

27. இற்றை இந்தியாவில் 15.9 கோடி மாடுகளும், 4.48கோடி எருமைகளும், 3.87 கோடி செம்மறியாடுகளும், 5.66 கோடி வெள்ளாடுகளும் இருக்கின்றன.

28. இங்கு இப்பொழுது 150 சருக்கரை ஆலைகள் செயல்புரிந்து வருகின்றன.

29. 12 தாள்செய்யும் ஆலைகள் வேலை செய்கின்றன

30. இந்தியாவில் 250-க்கும் மிகுதியான வேதியல் [ரசாயன] தொழிற்சாலைகள் உள்ளன. அவற்றில் 35,000 மக்கள் வேலை செய்கின்றனர்.

31. இந்நாட்டில் இப்பொழுது 24 பைஞ்சுதை [சிமெண்டு] செய் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன.

32. நம் நாட்டிலிருந்து 32 அயல்நாடுகளுக்கு வானூர்தித் தொடர்பு உள்ளது.

33. இங்குள்ள எல்லா வானூர்தி நிலையங்களும் சென்னை, பம்பாய், கல்கத்தா, தில்லி ஆகிய வானூர்தி நிலையங்களுடன் தொடர்பு கொண்டுள்ளன.

34. இந் நாட்டினின்றும் 32 அயல்நாடுகளுக்கு வான் வழித் தொடர்பு உள்ளது.

35. இந்தியக்கடற்கரையின் மொத்தநீளம் 5,700 பதினூற்றுச் சீரடி [கி. மீ.] களாகும்.

36. இங்கு தற்பொழுது 828 நிலக்கரிச் சுரங்கங்கள் இருக்கின்றன.

37. இங்கு முதன்முதலில் அமைக்கப்பட்டதும், நாட்டிலேயே பெரியதுமான இரும்பு உருக்குத் தொழிற்சாலை 'டாடா' தொழிற்சாலை தான், 'சாம்செட்பூர்' என்ற இடத்தில் இருக்கும் இத்தொழிற்சாலையில் 45,000 மக்கள் வேலை செய்கின்றனர்.

38. தேயிலை விளைவில் உலகிலேயே இந்தியா தான் முதலிடம் பெறுகின்றது. உலகில் விளையும் மொத்தத் தேயிலையில் பாதி, அஃதா

வது 50 விழுக்காடு தேயிலை நம் நாட்டில் விளைகின்றது நம்நாட்டில் விளையும் தேயிலையின் அளவு ஆண்டொன்றுக்கு 60 கோடி நிறை [பவுண்டு (அ) இராத்தல்] ஆகும்.

39. இந்நாட்டில் இப்பொழுது ஒவ்வோர் ஆண்டும் 4.9 கோடி கல்லெடை [49 மில்லியன் டன்] நிலக்கரி வெட்டியெடுக்கப்படுகிறது.

40. நிலக்கடலை உலகிலேயே இங்குதான் மிகுதியாய் விளைகின்றது. அஃது ஆண்டொன்றுக்கு 41 இலக்கம் கல்லெடை அளவு விளைகின்றது. நிலக்கடலை பயிராகும் நிலத்தின் பரப்பு 13 இலக்கம் குறுக்கங்களாகும்.

41 எள் 40,00,000 குறுக்கம் [ஏகர்] நிலத்தில் பயிரிடப்படுகிறது. அதனால் ஆண்டுதோறும் 305 ஆயிரம் கல்லெடை எள் நமக்குக் கிடைக்கிறது. உலகிலேயே எள் மிகுதியாய் விளைவது இந்தியாவில்தான்.

42. இந்நாட்டில் 4.3 கோடி குறுக்கம் நிலத்தில் 8,00,000 கல்லெடை கடுகு விளைகின்றது.

43. இந்தியாவில் ஆண்டுதோறும் 350 கோடி தேங்காய்கள் கிடைக்கின்றன. அவை 15,00,000 குறுக்கம் நிலத்தில் உள்ள மரங்களினின்றும் கிடைக்கின்றன.

44. உலகில் கிடைக்கும் பொன்னில் 2 விழுக்காடுதான் இங்குக் கிடைக்கிறது.

45. 65,00,000 பொதி [பேல்] அளவிற்குப் பருத்தி விளைகின்றது.

46. இந்தியாவில் ½ கோடி குறுக்கம் நிலத்தில் 14 இலக்கம் கல்லெடை கேழ்வரகு விளைகின்றது.

47. 35,00,000 கல்லெடை கொள்ளு, 1.7 கோடி குறுக்கம் நிலத்தில் பயிரிடப் படுகின்றது.

48. இந்தியாவில் மொத்தம் 20 இலக்கம் கல்லெடை [Ton] பருத்திக் கொட்டை கிடைக்கின்றது.

49. இந்தியாவில் 250,00,000 குறுக்கம் நிலத்தில் நெய்த்திணைகள் [எண்ணெய் வித்துகள்] பயிரிடப்படுகின்றன. 76,00,000 கல்லெடை நெய்வித்துகள் விளைகின்றன.

50 இங்கு 33,00,000 குறுக்கம் நிலப்பரப்பில் 'ஆளிவிதை' பயிரிடப்படுகின்றது. உலகில் ஆளிவிதை மிகுதியாய் விளையும் நாடுகளில் இந்தியா இரண்டாவது நாடாகும்.

51. இந்நாட்டில் 14 இலக்கம் குறுக்கங்களில் ஆமணக்குப் பயிரிடப்படுகின்றது 1,30,000 கல்லெடை விளை அளவாகும். உலகில் இங்கு மட்டுந்தான் ஆமணக்கு பயிராகின்றது.

52. இந்தியாவில் 40,00,000 இலக்கம் கல்லெடை அளவுள்ள சோளம் 2.4 கோடி குறுக்கங்களில் விளைகிறது.



# குட்டிக்கதை

## மரம் அழுதது!

பாவை. நடவரசன்.

நகருள் அமைந்திருக்கும் நல்லதொரு பூங்கா. நீண்டு வளர்ந்த நெடுமரங்களும், பூத்து மணக்கின்ற பூஞ்செடிகளும், பசும்புல் தரைகளும் நிறைந்த பூங்கா, அது.

அதனுள் நீண்டு வளர்ந்திருந்த நெடுமரக்கிளையில் காகங்கள் கூடி அமர்ந்திருந்தன; 'கா கா!' எனக் கரைந்து கொண்டிருந்தன. மாலைநேர மாகையால், அதனடியில் போடப்பட்டிருந்த பலகையிலும், பசும்புல் தரையிலும் பலர் அமர்ந்திருந்தார்கள். சிலர், எதையோ வாயில் போட்டு, மென்று விழுங்கிக்கொண்டிருந்தார்கள். இன்னும் சிலர், வறுத்த கடலையை விரலால் நுணுக்கி வாயால் நொறுக்கித் தின்றுகொண்டிருந்தார்கள். அப்படித் தின்றுகொண்டிருந்தவர்கள், தம் பக்கத்தில் அமர்ந்திருப்பவர்களுக்குத் தின்னும் பொருளில் கொஞ்சங்கூட கொடுக்கவில்லை. அவர்களைத் திரும்பி பார்க்கவும் இல்லை. மாடு, புல்தின்பதுபோல் தின்று கொண்டிருந்தார்கள்; அசை போடுவதுபோல் வாயை அசைத்துக் கொண்டிருந்தார்கள்.

கிளையில் அமர்ந்திருந்த காகங்களில் ஒன்று, இதனை உற்றுக் கவனித்தது. உடனே அங்கிருந்த காகங்களைப் பார்த்து, "இதோ! கீழே அமர்ந்திருக்கும் இந்த மாந்தக் கூட்டத்தைப் பாருங்கள். அவர்களுக்குத் தம்மிடமுள்ள பொருளை மற்றவர்களுக்கும் கொடுத்துண்கின்ற பழக்கம் இல்லையா? அப்படிக் கொடுப்பவர்களாக இருந்தால், தம் பக்கத்தில் அமர்ந்திருப்பவர்களுக்கு அவர்கள் ஏன் கொடுக்கவில்லை?" எனக் கேட்டது.

பட்டறிவு மிகப்பெற்ற காகமொன்று வாய்திறந்து பேசியது:—
"அவர்கள் மாந்தக்கூட்டம். அப்படித்தான் இப்பொழுது நடந்துகொள்கிறார்கள். நாமும் நம்மைப்போல் மரமும்தான், பிறருக்குக் கொடுக்கின்றோம்; பொதுநலத்தைப் பேணுகின்றோம். நாம், இங்

கேயே குடியிருந்தால் நம்முடைய பண்பும் பழக்கவழக்கங்களும் அவர்களைப் பார்த்துப் பார்த்துக் கெட்டுப்போய் விடும். வா! நாம் சிற்றூர்க்கே சென்று விடுவோம்!''

அப்படிச் சொல்லிய அந்தக் காகம், எழுந்து பூங்காவை விட்டுப் பறந்தது. மற்றக் காகங்களும் எழுந்து பறந்தன. ஆனால், அவற்றைப்போல் பறக்க இறக்கை இல்லாத மரமோ, மாந்தனிடமிருந்து போக முடியவில்லையே என நினைத்துப் பதைபதைத்து, இலைகளால் அடித்துக்கொண்டது; கிளையெல்லாம் காற்றில் அசைய 'ஓ' வென அழுதது. ○

# இந்தியாவிலேயே மிகப்பெரிய......!

## தொகுப்பு: கதிரொளி

0 ஏரி— ஊலார் ஏரி— காசுமீரம்.
0 மலைமுடி–எவரெஃச்ட்டு–நேபாளம்.
0 நகரம்–கல்கத்தா–மே. வங்காளம்.
0 நீர்வீழ்ச்சி–செருசோப்பா-மைசூர்.
0 குகை–எல்லோரா–ஆந்திரம்.
0 வளைவு-இராமேசுவரம்–தமிழ்நாடு.
0 நீண்ட பாலம்–சோனே ஆற்றின்பாலம்–பீகார்.
0 கோபுரம்–குதுப்மினார்-தில்லி.
0 மழை பெய்யும் இடம்–சிரபுஞ்சி–அசாம்.
0 மாநிலம் (மக்கள் தொகை மிகுந்தது)–வடபைதிரம்–
(உத்தரப்பிரதேசம்)
0 கற்படிமம்–கேமடேசுவரர்–மைசூர்.
0 தூக்குபாலம்–(56 அடி உயரம்)-அவுராபாலம்–மே. வங்காளம்.
9 வாயில்–புலந்து தர்வாசா–பதேபூர் சக்கிரி (தில்லி)
0 விலங்குக் காட்சிச்சாலை–கல்கத்தா–கல்கத்தா.
0 சாலை–கிராண்ட் டிரங்கு சாலை–கல்கத்தா.
(1500 கற்கள்)
0 பள்ளிவாயில்–'மசூதி,–கூட்டுத்தொழுகைப்பள்ளி-தில்லி.
(சும்மா மசூதி)
0 மாநிலம்–[பரப்பளவு]–(130272 ச. கற்கள்)-நடுப்பைதிரம்.
[மத்தியப்பிரதேசம்] ●

# பிறமொழியில் திருக்குறள்.

தெள்ளுதமிழ் வள்ளுவனார் இயற்றிய திருக்குறள் உலகப் பேரறிஞர் பலராலும் போற்றிப்புகழப்பட்டுள்ளது. உலகப்பெருமொழியாகிய ஆங்கிலத்திலும், மற்றும் உருசிய மொழி, வடமொழி, இந்தி, மலையாளம், தெலுங்கு கன்னடம் போன்றவற்றிலும் திருக்குறள் மொழி பெயர்ப்புகள் உள்ளன.

திருவாளர்கள்: கிண்டர்ஃச்லி, கோவர், இராபின்சின், இலாசரசு, இஃச்காட் (T M. Scott), பாப்ளி, எல்லிசு, ட்ரு (W. H, Drew) பூரணலிங்கம் பிள்ளை, இராமச்சந்திர தீட்சதர், இராசகோபால அய்யங்கார், வ. வே. சு. அய்யர், தங்கசாமி, இராசகோபாலாச்சாரியார், அரங்கநாத முதலியார், சக்கரவர்த்தி, கிருட்டிணமாச்சாரியார், பாலசுப்பிரமணியம், சபாரத்தின முதலியார், மைக்கேல், ஐசக் தங்கையா, வடிவேலுசெட்டியார், பரமேசுவரன்பிள்ளை, திருவாட்டி. திருநாவுக்கரசு ஆகியோர் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளனர்.

வீரமாமுனிவர், கிரௌல் (Dr. Graul), இராயகிரால் (Rayacral) ஆகிய மூவரும் திருக்குறளை இலத்தீனில் மொழிபெயர்த்துள்ளனர். காமர்சு (A. F. Cammers) ருகர்டு (Fridrich Ruckert), கிரௌல், ராயகிரால் ஆகியோர் செருமனியில் மொழிபெயர்த்திருக்கின்றனர். ஏரியல், மோசு, (P. G. Dedumast), லெமரசு, லூயி செக்கோலியா, பொண்டேனே ஆகியோர் குறளின் பல பகுதிகளைப் பிரஞ்சு மொழியிற் பெயர்த்துள்ளனர். உருசிய மொழியிற் குறளைப் பெயர்த்தெழுதியவர் சிலாசோவ் என்பவர். அண்மையில் போலிசு (Polish) மொழியிலும் திருக்குறள் பெயர்த்தெழுதப்பட்டுள்ளது.

இராமதேசிகன், ஏலாசாரியார் என்னும் இருவரும் வடமொழியிற் குறளைப் பெயர்த்தெழுதியுள்ளனர். சேமானந்த இராகத்து (Kshemanand rahat) இந்தியில் இயற்றிய திருக்குறள் மொழி பெயர்ப்பு 'தமிழ்வேதம்' என்னும் பெயரில் வெளிவந்துள்ளது. மற்றும் பேராசிரியர் செயின் (B. D. Jain) சங்கரராசு நாயுடு ஆகியோரும் திருக்குறளை இந்தியில் மொழிபெயர்த்துள்ளனர்.

குறளை மலையாளத்தில் மொழிபெயர்த்தவர்கள் இரவிவர்மா, கோவிந்தப்பிள்ளை, பரமேசுவரம்பிள்ளை ஆகியோர். நரசிம்மாச்சாரியார் 'நீதிமஞ்சரி' என்ற பெயரில் குறளைக் கன்னடமொழியிற் பெயர்த்துள்ளார். திரு. வேங்கடராம வைத்தியநாதர் என்பவர் திருக்குறளைத் தெலுங்கில் மொழிபெயர்த்திருக்கிறார். மற்றும் மராத்தி, பர்மியம், சிங்களம், மலாய், சீனம் ஆகிய மொழிகளிலும் திருக்குறள் மொழி பெயர்ப்புகள் வெளிவந்துள்ளன. (நூல்-திருவள்ளுவன்) 0

# பயன்மொழிகள்.

0 சக்கரம் சுழன்று செல்வதுபோல் முன்னேற்றப் பாதையில் நில்!
—ஔவையார்.

0 கடந்துபோன நிகழ்ச்சிகளைப் பற்றிக் கவலைப்பட்டுக் கண்ணீரை மேன்மேலும் வீணாக்காதீர்கள்!
—ஐரிபைடசு.

0 ஒருவனது குறிக்கோளைக் கொண்டே அவன் எத்தகையவன் என்று அறிந்து கொள்ளலாம்.
—கோமசு.

0 ஐயத்தைப்போல் விரைவிலே வளரும் நச்சுமரம் வேறு இல்லை.
—காண்டேகர்.

0 எத்தனை இயற்கை ஆற்றல்கள் இருந்தாலும் அடிமை நாட்டில் வாழும் மாந்தன் குடத்தில் இட்ட விளக்காவான். உரிமை பெற்ற நாட்டிலுள்ள அறிவாளி குன்றின்மேல் இட்ட ஒளியாவான்.
—நெ. து. சுந்தரவடிவேலு.

0 மாந்தனால் உண்டாக்கப்பட்ட குழப்பங்களை மாந்தனாலேயே தீர்க்கமுடியும்.
—கென்னடி.

0 இறைவனால் முடியாத செயல் ஒன்று உண்டு. நடந்ததை நடவாததாக ஆக்க அவராலும் இயலாது.
—ஆப்பிரிக்கப் பாதிரியார்.

0 தனிமரம் தோப்பாகாது. ஆனால் தோப்பாவதற்கு அது துணை செய்யும்.
—தாகூர்.

0 நல்ல நம்பிக்கையில் உருவாகும் கருத்துக்கு என்றும் அழிவில்லை.
—பூவேசுடர்.

0 சரியான நேரத்தில் சரியான முடிவெடுத்துச் சரியாகச் செயல்படுத்தும் மாந்தனுக்குப் பெருமை தவிர வேறு இல்லை.
—கானிங்,

0 உன் நினைவு, சொல், செயல் ஒவ்வொன்றையும் இனியதாயும் தூயதாயும் ஆக்கு!
—சேமசு ஆலன்.

---

தொகுப்பு: கதிரொளி, சேரன்மாதேவி.

---

(புதிரின் விடை அடுத்த இதழில் தொடரும்.)

# சமசுகிருதத்தில் தமிழ்ச்சொற்கள்-5

| தமிழ் | சமசு(வ. மொ.) | தமிழ் | சமசு(வ.மொ.) |
|---|---|---|---|
| தயிர் | ததி(dadhi) | துவரம் | துவர, துபர |
| தரங்கம்(அலை) | தரங்க | துவரை | துவரிகா |
| தருக்கம் | தர்க்க | துவரை | துவாரகா |
| தவி(தாகம்) | தப் | துவள் | த்வ்ரு(dh) |
| தவம் | தபஸ் | துவை(ஒலி) | த்வன் |
| தளம் | தல | துளசி | துலசி |
| தா(தந்தை) | தா | துறட்டி | த்ரோட்டி, த்ரோத்ர. |
| தா(கொடு) | தா(da) | தோட்டி | தோத்ர |
| தானம் | தான | தூணம் | ஸ்தூண(ணு) |
| தாடி | தாடிகா(dh) | தூணம் | தூண |
| தாண்டகம் | தண்டக | தூணி (அம்புக்கூடு) | தூணி |
| தாண்டவம் | தாண்டவ | தூணி (4 மரக்கால்) | த்ரோண |
| தாத்தா | தாத்த | தூது | தூத[duta] |
| தாம்பு | தாமன் | தூரி | தூலி, தூரிகை |
| தாம்பணி | தாமணு | தூளி | தூலி |
| தாமரை | தாமரஸ | தேவன் | தேவ |
| தாமரம் | தாம்ர | தீ | தீ |
| தும்பரம் | உதும்பர,உடும்பர | தெய்வம் | தைவ |
| தாவு | தாவ் | தோரணம் | தோரண |
| தாளம் | தால | தோள் | தோஸ்[d] |
| தாளி [கூந்தற் பனை] | தால | நகரம் | நகர |
| திடம் | த்ருட | நசி | நச் |
| தித்தி | த்ருத்தி | நடி | நட்,ந்ருத் |
| திமி[பருமன்] | திம, திமீ | நடம் | நட |
| திரு | ச்ரீ | நட்டம் | ந்ருத்த |
| தீய் | தீ | நடனம் | நடன |
| தீவம் | தீப | நடிகன் | நடிக |
| தீவு | த்வீப | நடிகை | நடிகா |
| துந்தி[தொந்தி] | துந்த, துந்தி | நட்டணம் | நர்த்தன |
| து[ப்பு][வலியுறு] | து | நாகம் | நாக |
| துர[விரைவு] | த்வர் | நாகரிகம் | நாகரிக |
| துடுவு | த்ரு | நாடகம் | நாடக |
| துரை[வேகம்] | த்வரா | நாளம் | நால |
| துலை | துலா | நாணல் | நாட |

| தமிழ் | சமசு(வ. மொ,) | தமிழ் | சமசு(வ. மொ.) |
|---|---|---|---|
| நாடி | நாடி | பண்ணியம் | பண்ய |
| நாலா | நாணா | பதக்கம் | பதக |
| நாவாம் | நௌ, நாவ | பதம் | பத |
| நாழி | நாடி | பாதம் | பாத |
| நாழிகை | நாடிகா | பதவி | பதவீ |
| நிமை | நிமி | பதிகம் | ப்ரதீக |
| நிலையம் | நிலய | பப்படம் | பர்ப்பட |
| நீரம் | நீர | பரம் | பர |
| நீலம் | நீல | பரமன் | பரம |
| நுகம் | யுக | பரமன் | பிரஹ்மா[B] |
| உ | யு | பரிதி | பரிதி[ćh] |
| யுத்தி | யுக்தி | பல்லக்கு | பர்யங்க்க |
| நுந்து | நுத் | பல்லி | பல்வீ |
| நேயம் | ஸ்நேக | பலகை | பலக |
| பகு | பஜ் | பலம் | பல |
| பக்கம் | பக்ஷ | பலா | பல |
| பங்கு | பங்க | பவளம் | ப்ரவால |
| பகவன் | பகவன் | பழு | பல் |
| பாகம் | பாக | பழம் | பல |
| பந்தி | பங்க்தி | பள்ளி | பல்லி |
| பஞ்சி | பஞ்சி | பளிங்கு | ஸ்படிக |
| பட்டணம் | பட்டண | பாண்டியன் | பாண்ட்ய |
| பட்டம் | பட்ட | பாதிரி | பாடலி |
| பட்டி | பட்டி | பிங்கலை | பிங்கலா |
| பட்டிகை | பட்டிகா | பிசை | பிஷ் |
| படகம் | படஹ | பிண்டா | பிண்ட |
| படம்[துணி, ஓவியம்] | பட | பிண்ணாக்கு | பிண்யாக |
| படம்[படாம்] | பட்ட | பித்தம் | பித்த |
| படம்[பாம்பின் படம்] | பட | புகு | புஜ |
| படலம் | படல | புட்டம் | ப்ருஷ்ட |
| படி | பட் | புடம் | புட |
| படி | ப்ரதி | புடலை | படோல |
| படிமை | ப்ரதிமா | புரசு | பலாச |
| பண்டாரம்[சரக்கறை] | பாண்டார | புரம் | புர |
| பண்டாரம்[ஆண்டி] | பிண்டார | புரி | ப்ரீ |
| பண்டிதன்[புலவன்] | பண்டித | | |

[தொடரும்]

[பாவாணரின் 'வடமொழி வரலாறு.']

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.